மாவத்தகம பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாவத்தகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மாவத்தகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுடன் இணங்காமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாது இருந்த 05 வழக்குகளுக்குரிய ஆண்டில் சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 256,921 செலுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்த வழக்குகள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	சட்ட ரீதியான நிலைமை தொடர்பாக சரியாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 766,331 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2022 ஆம் ஆண்டில் காணி ஏலமிடல் கம்பனியால் சபைக்கு வழங்கப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 1,800,000 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித வைப்பு மீதி ரூபா 7,125,910 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கு அறிக்கையில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ)	மீளாய்வாண்டிற்குரிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 363,388 பொது வழங்கல் கடன் கொடுத்தோர் கணக்கில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கு அறிக்கையில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய நிர்வாக செலவினம் ரூபா 780,462 மூலதன உதவிக் கணக்கிலும் கடன்பட்டோர் கணக்கிலும் கைவிடப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கு அறிக்கையில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	மாவத்தகம முன்பள்ளி பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செய்தலுக்காக ஏற்பட்ட செலவிடப்பட்ட ரூபா 195,338 தொகை சொத்துக்களாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கு அறிக்கையில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் ரூபா 137,827 நிதி நிலமைக் கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	விடயங்களைக் கண்டறிந்து சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய முத்திரை வரி ரூபா 130,809 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	விடயங்களைக் கண்டறிந்து சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஐ)	மீளாய்வாண்டிற்குரிய ஏனைய மீண்டெழும் வருமானம் வருமானத் தலைப்பு 05 இன் கூட்டுப்பெறுமதி ரூபா 32,267,087 குறைத்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கு அறிக்கையில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஒ)	மீளாய்வாண்டிற்குரிய மீண்டெழும் செலவினங்களில் 04 செலவினத் தலைப்புகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 721,241 அதிகரித்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.	சகல சரி செய்தல்களும் அடுத்து வரும் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டிற்குரிய மூலதன செலவினத் தலைப்புக்கள் 02 இனது பெறுமதி ரூபா 58,773,997 அதிகரித்தும், மூலதன செலவினத் தலைப்புக்கள் 02 இனது பெறுமதி ரூபா 58,070,706 குறைத்தும் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.	இது தொடர்பாக சகல சரி செய்தல்களும் அடுத்து வரும் நிதிக்கூற்றில் சரி செய்யப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 07 சொத்து விடயங்களுக்கும் மற்றும் 06 பொறுப்பு விடயங்களினதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 55,009,948 வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	பட்டோலையின் பிரகாரம் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி சீராகின்ற வகையில் சரி செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் ஆண்டில் சொத்துக் கைப்பற்றல்களின் பெறுமதி ரூபா 10,709,836 ஆக இருந்த போதும் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் ரூபா 10,351,682 ஆக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 358,154 வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் அண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 40,208,198 ஆக இருந்த போதும் அது தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் ரூபா 6,139,451 ஆக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 34,068,747 வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் அண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 21 மோட்டார் வாகனமும் வண்டியினதும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கின்ற மீதிக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 38,526,535 வேறுபாடு காணப்பட்டது.	எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலையான சொத்துப் பதிவேடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்காக தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீதி உறுதிப்படுத்தல் மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 366,294 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதிப்படுத்த முடியாதிருந்தது.	பல வருட காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் மீதி உருவாக்கப்பட்ட முறை தொடர்பான தகவல் எதுவும் காணப்படவில்லை.	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	நிதிப்பிரமாணம் 371(3)	பெறுமதி ரூபா 410,043 ஆன முற்பணம் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 571(2)	பெறுமதி ரூபா 999,147 ஆன 02 வருட காலத்தை விஞ்சிய நானாவித வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமானத்தின் பிரகாரம் ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	நிதிப்பிரமாணம் 893	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வு பெற்றுச் செல்லல் மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 121,842 பெறுமதியான பிணைகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் சகல பிணைப் பணத்தையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அரச நிர்வாக சுற்றறிக்கை			
(i)	2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற சுற்றறிக்கை	சபைக்குச் சொந்தமான 26 வாகனங்கள் நிறுவனத்தின் பெயருடன் அரச இலட்சனை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க இலட்சனை பொறிக்கப்படாத வாகனங்களில் இந்த இலட்சனை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற சுற்றறிக்கையின் 3(1) ஆம் பந்தி	பிரதேச சபைக்குரிய 17 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை	உள்ளூராட்சி இயந்திரப் பொறியிலாளருக்கு அறிவித்து எதிர்காலத்தில் எரிபொருள் எரிவினை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	2023 மார் 09 ஆம் திகதிய இலக்கம் NWP/CS/AD/12/6-3 என்ற மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்புத் தொடர்பான சுற்றறிக்கை	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு 06 ஊழியர்கள் பிணை வைத்திருந்ததுடன் ஏனைய பிணை வைக்க வேண்டிய 10 உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை வைத்திருக்கவில்லை.	சேமிப்புக் கணக்கு திறக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் சனவரி மாதம் முதல் சம்பளத்தில் இருந்து பிணை வைப்பை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,697,558 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,481,614 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கின் காசேட்டின் பிரகாரம் மீதிக்கும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் இடையே 253,488 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	CAT மென்பொருளின் கீழ் இணையவழி ஊடாக செலுத்தும் போது (online payment) ஏற்பட்ட வேறுபாடு ஆகும்.	வேறுபாடுகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடுதல் வேண்டும்

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	5,411	5,903	6,679	7,599	3,911	3,911	2,646	8,371
ii.	வாடகை	13,550	13,550	13,941	663	3,801	10,339	10,513	852
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	500	279	279	-	500	500	640	-
iv.	ஏனைய வருமானம்	20,150	40,000	84,939	28,163	35,050	35,050	12,220	73,102
	மொத்தம்	39,611	59,732	105,838	36,425	43,262	49,800	26,019	82,325

2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 59.7 மில்லியன் ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானப் பெறுவனவை உள்ளடக்கி ரூபா 105.8 மில்லியன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டுகளில் நிலுவையுடன் மீளாய்வாண்டில் இறுதியில் ரூபா 36.4 மில்லியன் மேலும் அறவிட வேண்டிக் காணப்பட்டது.	மிகுதி நிலுவையை தொடர்ந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 8,371,000 நிலுவையில் ரூபா 4,879,763 தொகையும், சிட்டையிடல் ரூபா 5,903,000 தொகையில் ரூபா 2,719,274 தொகையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மிகுதி நிலுவைப் பணத்தை விரைவாக அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானம் மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 593,477 நிலுவை ஏக்கர் வரி தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காணி குடும்ப அங்கத்தவர்களுக்கு பிரிந்து சென்றமை, காணிப் பகுதிகள் விற்பனை செய்யப்பட்டமை, ஏக்கர் வரி கமநல சேவை நிலையத்திற்கு செலுத்தியமை, ஆரம்ப உரிமையாளர் மரணமடைந்தமை போன்றவற்றின் காரணத்தினால் ஏக்கர் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது.	நிலுவை வருமானம் மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**வாடகை**		
(i)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வாடகை மற்றும் சொத்துக்கள் வாடகைக்கு வழங்குவதன் அடிப்படையில் வாடகை ரூபா 662,941 அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவைகளை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்	நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 288,000 நிலுவை வாடகைத் தொகை அரசாங்கத் துறையின் நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டி இருந்தது.	நிலுவைப் பணத்தை தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	**எனைய வருமானம்**		
	மாகாண சபையின் செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத்	நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக்	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு

தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டி இருந்த நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 699,541 மற்றும் ரூபா 28,162,963 இனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
ரூபா 279,000 செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையில் வடி ஊடகம் தயாரித்தல் 2021 மே 31 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் 2021 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை செயலிழந்து காணப்பட்டது. அதனை சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு 2025 மார்ச் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வடி ஊடாகத்தை சிறந்த நிலைமைக்கு கொண்டு வந்து கழிவு நீரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் உக்குகின்ற கழிவுப் பொருட்களை சேகரிக்கும் செயல் முன்னேற்றம் 25 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் கூட்டுப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனையில் கிடைத்த வருமானம் முறையே 84 சதவீதத்தாலும், 82 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.	பொப்கெட் இயந்திரம் மற்றும் ஹலர் இயந்திரம் செயலிழந்தமை அடிப்படைக் காரணமாக இருந்தது.	பசளை உற்பத்தியை அதிகரித்து வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 17 கணக்குகளில் காணப்பட்ட ரூபா 61,685,154 மீதியில் 05 வருட காலத்தை விஞ்சிய மீதி ரூபா 3,612,841 ஆகக் காணப்பட்டது.	பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பெற வேண்டிய பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 93,989 ஆன 09 முற்பண மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை	இந்த மீதிகளை புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு மேலும் விடயங்கள்	கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	எடுக்கப்படவில்லை.	கண்டறியப்படும்.	
(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 20 கணக்குகளில் காணப்பட்ட ரூபா 74,346,277 மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 4,781,120 மீதி காணப்பட்டது. இவ்வாறே இவற்றின் இருப்பு தொடர்பில் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செலுத்த வேண்டிய கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் இருப்பைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட செலுத்த வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் வேலை முற்பண மீதியின் கூட்டு மொத்தம் ரூபா 97,927 ஆண்டில் அங்கீகாரம் இன்றி திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதி கணக்கில் அதற்குரிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	செலுத்த வேண்டிய கணக்குகளைப் பதிவழிக்கும் போது தேவையான அங்கீகாரத்தைப் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான கெப் வண்டி மற்றும் டெக்டர் டேலர் என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்காக முறையே 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையிலும் அந்த வாகனங்கள் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்க வில்லை.	உள்ளூராட்சித் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்று இயந்திர பொறியியலாளரின் பரிசோதனையின் பிரகாரம் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அங்கீகாரத்தைப் பெற்று விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனம் மற்றும் வண்டியில் உள்ளடங்கியுள்ள ரூபா 117,340 பெறுமதியான கழிவுப் பொருள் வண்டி / 04 கைவண்டிகள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் பௌதீக ரீதியில் காணப்படவில்லை.	இந்த கை வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் தொடர்பாக கண்டறிந்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சபையின் சொத்துக்களின் இருப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 முதல் 2024 திசெம்பர் 31 இற்கு இடையிலான காலத்தில் 435 கல்வனைஸ் குழாய்கள் தொலைந்துபோய் இருந்ததுடன் அது தொடர்பாக உரிய பொறுப்பு வாயந்த தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	முன்னர் இருந்த பிரதேச சபை உறுப்பினர்களால் GI குழாய் 158 எண்ணிக்கையொன்றுடன் மேலும் 180 குழாய்களும் குருநாகல் பிரதேச சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மீளக் கையளிக்கப்படவில்லை. அது தொடர்பாக	பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		உறுப்பினர்களுக்கு அறிவித்து மீள வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

3.6 ஒப்பந்த நிர்வாகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வீதிகளுக்கு உரிய உள்ளூராட்சி நிறுவனங்களிடம் விசாரணை செய்தல் மற்றும் சாத்தியவள ஆய்வு இன்றி மாவட்ட அபிவிருத்தி குழு ஊடாக தெரிவு செய்யப்பட்டமையால் அதிகாரப் பிரதேசத்தின் முன்னுரிமையின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்படுகின்ற வீதிகள் தெரிவு செய்யப்படாமல் நலன் பெறுனர்கள் குறைந்த குடும்பங்களின் எண்ணிக்கையுடன் வீதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தது.	2024 பிணை முறி குறிகாட்டிகளின் வேலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற முன்மொழிவுகள் பிரதேச செயலகத்தால் பெறப்பட்டதுடன் இதில் குறிப்பிடப்பட்ட வீதி பிரதேச சபைக்கு சொந்தமாக வீதியாக இருந்தமையால் அந்த நிறுவனத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் மூலம் இது தொடர்பாக மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மேற்பார்வை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	நிறுவனங்களுக்கு இடையே சரியான தொடர்பினைப் பேணி முன்னுரிமையின் பிரகாரம் அபிவிருத்தி செயற்திட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

3.7 மனிதவள முகாமைத்துவம்

(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(i)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாத 07 பதிவுகளுக்காக 13 உத்தியோகத்தர்கள் சபையினால் சேரக்கப்பட்டிருந்தனர்.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் எனினும் இதுவரை உரிய அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை.	அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	சேர்க்கப்பட்ட பதவிகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றாமல் ஏனைய பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு 14 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	சேவை வெற்றிடத்தின் அடிப்படையில் அந்த பணிகளை பூர்த்தி செய்வதற்கு தேவையின் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	ஆட்சேர்ப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) ஊழயர் கடன்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதித் திகயில் உள்ளவாறு ஒய்வூதியம் பெற்றுச் செல்லல் / இடமாற்றலாகிச் செல்லல் போன்ற விடயங்களின் காரணமாக 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 125,833 இனை அறவிடுதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	ஓய்வூதிய சம்பளத்தில் இருந்து அறவிடுவதற்கும், பிணையாளர்களின் பிணையில் இருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வேலைப் பிரிவில் திட்டமிடப்பட்ட 20 செயற்திட்டங்களில் ரூபா 16,000,000 ஆன 08 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.	நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் செயற்திட்டம் நிறைவேற்றப்படவில்லை.	பாதீட்டு நிதியேற்பாட்டின் அடிப்படையில் திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சனைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபையினால் கழிவு நீர் வடிக்கும் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5,149,260 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதனைப் பயன்பாட்டிற்கு எடுக்காமையின் காரணமாக தற்போது சபையினால் கழிவு நீர் கழிவுப் பொருட்கள் உரிய நியமம் இன்றி வெட்டப்பட்டு குழிகளில் போடப்பட்டிருந்தது.	இது தொடர்பாக குருநாகல் பெரிய அளவிலான கழிவுநீர் அகற்றும் செயற்திட்டத்தின் பொறியியலாளரின் ஆலோசனையைப் பெற்று உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்படும்.	சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மலக் கழிவுகளை அகற்றுதல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபையினால் அறிவிக்கப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் மக்களின் பல்வேறு வகையான தேவைகளுக்காக ரூபா 1,350,886 செலவில் 15 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போதும் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகளை இனங்கண்டு அவற்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.